रेलवे भर्ती बोर्ड | RAILWAY RECRUITMENT BOARD
सीईएन ०१/२०२६ सहायक लोको पायलट (एएलपी) के पद पर भर्ती
CEN 01/2026 Recruitment of Assistant Loco Pilot (ALP)

Test Date	04/11/2026
Test Time	9:00 AM - 10:00 AM
Subject	RRB ALP 2026 CBT 1

*** Note**
Correct Answer will carry 1 mark per Question.
Incorrect Answer will carry 1/3 Negative mark per Question.

1. Options shown in green color with a tick icon are correct.
2. Chosen option on the right of the question indicates the option selected by the candidate.

Section : **RRB ALP**

Q.1 **30 cm விட்டமும் மற்றும் 49 cm உயரமும் கொண்ட ஒரு உருளையின் கனஅளவு _____ ஆகும்.**
$\pi = \frac{22}{7}$ எனக் கொள்க.

Ans
✗ A. 34569 cm^3
✗ B. 34606 cm^3
✗ C. 34725 cm^3
✓ D. 34650 cm^3

Q.2 **ஒரு தேர்தலில், ஒரு வேட்பாளர் 2,20,000 வாக்குகளில் 55% வாக்குகளைப் பெற்றால், அந்த வேட்பாளர் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை என்ன?**

Ans
✗ A. 1,30,000
✓ B. 1,21,000
✗ C. 1,10,000
✗ D. 1,15,000

Q.3 **கீழே எண்களின் இரண்டு தொகுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்களின் ஒவ்வொரு தொகுப்பிலும், முதல் எண்ணில் ஒரு குறிப்பிட்ட கணித செயல்பாடு செய்யப்படுவதன் மூலம் இரண்டாவது எண் ஆனது உருவாகுகிறது. இதேபோல், இரண்டாவது எண்ணில் ஒரு குறிப்பிட்ட கணித செயல்பாடு செய்யப்படுவதன் மூலம் மூன்றாவது எண் ஆனது உருவாகுகிறது மற்றும் இப்படியே தொடர்கிறது. கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எது, கேள்வியில் உள்ள அதே செயல்பாடுகளின் தொகுப்பைப் பின்பற்றுகிறது?**
(குறிப்பு-இரண்டு/மூன்று இலக்க எண்ணை செயல்பாடுகளுக்காக தனித்தனி இலக்கங்களாக பிரிக்க முடியாது, எ. கா. 37 ஐத் தொடர்ந்து 10 இருந்தால், இரண்டு இலக்க எண்ணை தனித்தனி இலக்கங்களாக உடைக்க முடியாது என்பதால் செயல்பாடு 3 + 7 ஆக இருக்க முடியாது.)
14 – 25 – 75 – 90 ; 12 – 23 – 69 – 84

Ans
✗ A. 4 – 15 – 45 – 70
✗ B. 6 – 17 – 68 – 83
✓ C. 8 – 19 – 57 – 72
✗ D. 10 – 21 – 63 – 76

Q.4 இந்தக் கேள்வியில், கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் அதன்பின் வரும் நிபந்தனைகளின்படி, எழுத்துக் குறியீடுகளைப் பயன்படுத்தி எண்கள்/சின்னங்களின் ஒரு குழுவானது குறியிடப்பட்டுள்ளது. நிபந்தனைகளைப் பின்பற்றும் சரியான குறியீடுகளின் தொகுப்பே உங்கள் விடையாகும். எந்த நிபந்தனையும் பின்பற்றப்படவில்லையெனில், அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி அந்தந்த எண்/சின்னங்களுக்கான குறியீடுகளை நேரடியாகப் பின்பற்ற வேண்டும்.

எண்/சின்னம் 4 @ 7 # 2 % 9 & 1 $ 8 + 5 6

குறியீடு J M P T D R W F H K A U L Q

நிபந்தனைகள்–
(i) முதல் உறுப்பு ஒரு சின்னமாக இருந்தால், இரண்டாவது உறுப்பை © எனக் குறியிடவும்.
(ii) மூன்றாவது உறுப்பு ஒரு சின்னமாக இருந்தால், நான்காவது உறுப்பை © எனக் குறியிடவும்.
(iii) ஐந்தாவது உறுப்பு ஒரு சின்னமாக இருந்தால், முதல் உறுப்பை © எனக் குறியிடவும்.

எனில், பின்வரும் எண்கள்-சின்னங்களின் குழுவிற்கான குறியீடு என்ன?
94#51

Ans
✔ A. WJT©H
✘ B. WJTL©
✘ C. ©JTLH
✘ D. WJTLH

Q.5 ஒரு கடைக்காரர் ஒரே மாதிரியான ஆறு மொபைல்ஃபோன்களை ₹75,000-க்கு வாங்கினார். அவற்றில் இரண்டை அவர் ₹34,000-க்கு விற்றார்.எனில் விற்கப்பட்ட அந்த இரண்டு மொபைல்ஃபோன்களின் மீது அவருக்குக் கிடைத்த லாப சதவீதம் என்ன?

Ans
✘ A. 35%
✘ B. 39%
✔ C. 36%
✘ D. 37%

Q.6 $\tan^4\theta + (2 - \sec^2\theta)\tan^2\theta + 2 - \sec^2\theta$ இன் மதிப்பு _____ ஆகும்.

Ans
✘ A. 2
✘ B. 0
✔ C. 1
✘ D. −1

Q.7 பின்வரும் எழுத்து வரிசையைப் பார்த்து, கேள்விக்கு பதிலளிக்கவும்.
(இடது) S Q A Y V Y V E R L O A J F V V A Z A A F Y (வலது)
தனக்கு உடனடி முன்பாக ஒரு மெய்யெழுத்தையும் மற்றும் உடனடி பின்பாக ஒரு மெய்யெழுத்தையும் கொண்டுள்ளவாறு இருக்கும் உயிரெழுத்துக்கள் எத்தனை உள்ளன?

Ans
✘ A. 2
✘ B. 5
✘ C. 4
✔ D. 3

Q.8 கொடுக்கப்பட்ட தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?
35,44,62,89,125, ?

Ans
✘ A. 171
✘ B. 173
✔ C. 170
✘ D. 172

black

Q.9 ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 311 என்பது 330 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 426 என்பது 445 உடன் தொடர்புடையது. எனில், அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 115 என்பது பின்வருவனவற்றில் எதனுடன் தொடர்புடையது?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13; 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

Ans
✗ A. 156
✗ B. 167
✓ C. 134
✗ D. 145

Q.10 F, A, C, I, N, G மற்றும் S ஆகிய ஒவ்வொருவருக்கும் வாரத்தின் திங்கள்கிழமை தொடங்கி அதே வாரத்தின் ஞாயிற்றுக்கிழமை முடிவடையும் வரை, வாரத்தின் வெவ்வேறு நாளில் விடுமுறை உள்ளது. A என்பவருக்கு முன்பாக யாருக்கும் விடுமுறை இல்லை. A மற்றும் I ஆகியோருக்கு இடையில் மூன்று நபர்களுக்கு மட்டுமே விடுமுறை உள்ளது. I மற்றும் C ஆகியோருக்கு இடையில் ஒரு நபருக்கு மட்டுமே விடுமுறை உள்ளது. F என்பவருக்கு புதன்கிழமையன்று விடுமுறை உள்ளது. N என்பவருக்கு, S என்பவருக்குப் பின்பு வரும் நாட்களில் ஒன்றில் ஆனால் G என்பவருக்கு முந்தைய நாட்களில் ஒன்றில் விடுமுறை உள்ளது. N என்பவருக்கு, வாரத்தின் எந்த நாளில் விடுமுறை உள்ளது?

Ans
✗ A. சனி
✗ B. ஞாயிறு
✓ C. வியாழன்
✗ D. திங்கள்

Q.11 ஒரு ஆய்வகத்தில் உள்ள ஒரு மாணவர், ஒலியானது காற்றை விட எஃகில் வேகமாகப் பயணிக்கிறது என்பதைக் கண்டறிகிறார். ஊடகத்தின் எந்தப் பண்பு இந்த உற்றுநோக்கலை சிறப்பாக விளக்குகிறது?

Ans
✗ A. ஊடகத்தின் வெப்பநிலை மற்றும் ஈரப்பதம்
✗ B.
ஊடகத்தின் தடிமன் மற்றும் நிறம்
✗ C.
ஊடகத்தின் வடிவம் மற்றும் அளவு
✓ D. ஊடகத்தின் அடர்த்தி மற்றும் மீள்தன்மை

Q.12 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில்,'HATE'என்பது '7856' என்றும், 'TEAM' என்பது '7659' என்றும் குறியிடப்பட்டுள்ளது. அந்த மொழியில் 'M' க்கான குறியீடு என்ன?

Ans
✗ A. 6
✗ B. 5
✓ C. 9
✗ D. 8

Q.13 P, Q, R, S, T, U மற்றும் V ஆகிய ஒவ்வொருவருக்கும் திங்கட்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமையில் முடியும் வகையில் வாரத்தின் வெவ்வேறு நாட்களில் தேர்வு உள்ளது. V என்பவருக்கு வெள்ளிக்கிழமையன்று தேர்வு உள்ளது. V மற்றும் S ஆகியோருக்கு இடையே இருவருக்கு மட்டுமே தேர்வு உள்ளது. S என்பவருக்கு Tக்கு உடனடி அடுத்த நாளே தேர்வு உள்ளது. R என்பவருக்கு U க்கு உடனடி அடுத்த நாளே தேர்வு உள்ளது, ஆனால் அது வியாழக்கிழமை அன்று அல்ல. Q என்பவருக்கு P க்கு உடனடி அடுத்த நாளே உள்ளது, ஆனால் அது U க்கு முந்தைய நாளாகும். பின்வருபவர்களில் யாருக்கு வியாழக்கிழமையன்று தேர்வு உள்ளது?

Ans
- ✔ A. Q
- ✘ B. P
- ✘ C. R
- ✘ D. S

Q.14 சுருக்கவும்: $\frac{52^2 - 12^3}{4^3 - 16 \times 3}$

Ans
- ✘ A. 66
- ✘ B. 72
- ✘ C. 57
- ✔ D. 61

Q.15 மோகன், நேஹல், ஓஜஸ்வி, பூஜா, சுரேஷ், துஷார் மற்றும் உமாங் ஆகிய ஏழு நபர்கள் ஒரு வட்ட மேசையைச் சுற்றி அதன் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். நேஹல் என்பவர் ஓஜஸ்வியின் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். உமாங் என்பவர் நேஹலுக்கு இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். துஷார் என்பவர் சுரேஷின் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். மோகன் என்பவர் உமாங்கின் உடனடி அருகாமையாளர் அல்ல. மோகனின் இடதுபுறத்தில் இருந்து எண்ணும் போது மோகன் மற்றும் உமாங்கிற்கு இடையில் எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

Ans
- ✘ A. மூன்று
- ✘ B. ஒன்று
- ✔ C. இரண்டு
- ✘ D. ஒருவருமில்லை

Q.16 C, F, J, R, N, U மற்றும் H ஆகிய ஒவ்வொருவருக்கும், ஒரு வாரத்தின் திங்கட்கிழமை தொடங்கி அதே வாரத்தின் ஞாயிற்றுக்கிழமை முடிவடையும் வகையில், வாரத்தின் வெவ்வேறு நாட்களில் ஒரு தேர்வு உள்ளது. N என்பவருக்கு வியாழக்கிழமை தேர்வு உள்ளது. C என்பவருக்கு முன்பாக ஐந்து பேருக்கு மட்டுமே தேர்வுகள் உள்ளன. F என்பவருக்கு R க்கு உடனடி பின்பாக தேர்வு உள்ளது; ஆனால், அது புதன்கிழமையன்று அல்ல. H என்பவருக்கு U க்கு பின்பாக, ஆனால் J க்கு முன்பாக தேர்வு உள்ளது. எனில், U மற்றும் J க்கு இடையில் எத்தனை பேருக்கு தேர்வுகள் உள்ளன?

Ans
- ✔ A. மூன்று
- ✘ B. இரண்டு
- ✘ C. நான்கு
- ✘ D. ஒன்று

Q.17 இந்தக் கேள்வி கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து, மூன்று இலக்க எண்களை அடிப்படையாகக் கொண்டது.
(இடது) 639 658 652 641 647 (வலது)
(எடுத்துக்காட்டு-697 – முதல் இலக்கம் = 6, இரண்டாவது இலக்கம் = 9 மற்றும் மூன்றாவது இலக்கம் = 7)

இரண்டாவது மிகப்பெரிய எண்ணின் இரண்டாவது இலக்கத்துடன், மிகச்சிறிய எண்ணின் மூன்றாவது இலக்கத்தைக் கூட்டினால் கிடைப்பது என்ன?

Ans
- ✗ A. 18
- ✗ B. 16
- ✓ C. 14
- ✗ D. 15

Q.18 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. எந்த ஒன்றானது அந்த குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

Ans
- ✗ A. GS - KW
- ✓ B. MQ - RU
- ✗ C. ZK - DO
- ✗ D. IJ - MN

Q.19 பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது மற்றும் '×' மற்றும் '÷' ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது எனில், கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?

5 ÷ 2 + 8 × 4 – 5 = ?

Ans
- ✗ A. 20
- ✓ B. 13
- ✗ C. 18
- ✗ D. 22

Q.20 ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 18 என்பது 59 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 15 என்பது 50 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, பின்வருவனவற்றில் 12 என்பது எதனுடன் தொடர்புடையது ஆகும்?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13. 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

Ans
- ✗ A. 45
- ✓ B. 41
- ✗ C. 36
- ✗ D. 32

Q.21 AB மற்றும் CD என்பன இரண்டு இணைக்கோடுகள் ஆகும். இதில் CDக்கு மேலே AB என்பது அமைந்துள்ளது. EF மற்றும் GH என்பன இரண்டு இணை குறுக்குவெட்டிகள் ஆகும், இவை AB ஐ முறையே P மற்றும் R ஆகிய புள்ளிகளிலும், CD ஐ முறையே Q மற்றும் S ஆகிய புள்ளிகளிலும் வெட்டுகின்றன. E மற்றும் G ஆகிய புள்ளிகள் AB க்கு மேலேயும் அதே சமயம் F மற்றும் H ஆகிய புள்ளிகள் CDக்கு கீழேயும் அமைந்துள்ளன எனக் கொள்ளவும். ∠EPB = 2a°, ∠DSG = b° மற்றும் ∠FQD = 80°, எனில், முறையே a மற்றும் b இன் மதிப்புகளைக் கண்டறியவும்.

Ans

✔ A. 50 மற்றும் 100

✘ B. 40 மற்றும் 100

✘ C. 40 மற்றும் 120

✘ D. 20 மற்றும் 80

Q.22 கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?

VSM 15 SPO 2 PMQ -11 MJS -24 ?

Ans

✘ A. HKP -44

✘ B. JKI -34

✘ C. HYT -35

✔ D. JGU -37

Q.23 ஒருபடித்தான கலவையை எந்தக் கூற்று சிறப்பாக விவரிக்கிறது?

Ans

✘ A. இது வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பண்புகள் மற்றும் தோற்றத்தைக் காட்டுகிறது

✘ B. இது வெறும் கண்ணால் பார்க்கக்கூடிய பொருட்களைக் கொண்டுள்ளது

✘ C.
இது எளிதில் காணக்கூடிய அடுக்குகளை உருவாக்குகிறது

✔ D.
இது முழுவதும் ஒரே மாதிரியான தோற்றத்தையும் இயைபையும் கொண்டுள்ளது

Q.24 $8b - \frac{1}{5b} = 8$ எனில், $25b^2 + \frac{1}{64b^2}$ என்ற கோவையின் மதிப்பு என்ன?

Ans

✔ A. $\frac{105}{4}$

✘ B. $\frac{7}{4}$

✘ C. $\frac{80}{49}$

✘ D. $\frac{120}{7}$

Q.25 சலவைச் சோடா தயாரிப்புச் செயல்முறையில், அதைப் பெறுவதற்காக எந்தச் சேர்மமானது நீருடன் சேர்த்து சுத்திகரிக்கப்படுகிறது (treated)?

Ans

✘ A. சலவைச் சோடாவைப் பெறுவதற்கு சோடியம் குளோரைடு நீருடன் சேர்த்து சுத்திகரிக்கப்படுகிறது

✔ B. சலவைச் சோடாவைப் பெறுவதற்கு சோடியம் கார்பனேட் நீருடன் சேர்த்து சுத்திகரிக்கப்படுகிறது

✘ C. சலவைச் சோடாவைப் பெறுவதற்கு சோடியம் ஹைட்ராக்சைடு நீருடன் சேர்த்து சுத்திகரிக்கப்படுகிறது

✘ D. சலவைச் சோடாவைப் பெறுவதற்கு சோடியம் பைகார்பனேட் நீருடன் சேர்த்து சுத்திகரிக்கப்படுகிறது

Q.26 **O-ஐ மையமாகக் கொண்ட ஒரு வட்டத்தின் விட்டம் PQ ஆனது M என்ற புள்ளியில் RS என்ற நாணுக்கு செங்குத்தாக அமைகிறது. புள்ளி Q ஆனது சிறிய வட்டத்துண்டிலும், புள்ளி P ஆனது பெரிய வட்டத்துண்டிலும் உள்ளன. RS = 32 cm மற்றும் QM = 6 cm எனில், PM-இன் நீளம் (cm இல்) என்ன?**

Ans

✗ A. $48\frac{2}{3}$

✓ B. $42\frac{2}{3}$

✗ C. $24\frac{2}{3}$

✗ D. $32\frac{2}{3}$

Q.27 **தண்ணீருக்கு அடியிலும் மற்றும் திறந்த வெளியிலும் ஒரு மணி அடிக்கப்பட்டால், இந்த இரண்டு சூழ்நிலைகளுக்கும் இடையே ஒலியின் வேகத்திற்கு என்ன நிகழ்கிறது என்பதைப் பின்வருவனவற்றில் எது சிறப்பாக விவரிக்கிறது?**

Ans

✗ A. ஒலியானது காற்றில் பயணிப்பதை விட தண்ணீரில் மெதுவாகப் பயணிக்கிறது.

✗ B. ஒலியானது இரண்டு ஊடகங்களிலும் ஒரே வேகத்தில் பயணிக்கிறது.

✗ C.
ஒலி நீரினுள் பயணிக்காது.

✓ D. ஒலியானது காற்றில் பயணிப்பதை விட தண்ணீரில் வேகமாகப் பயணிக்கிறது.

Q.28 **7 தொழிலாளர்களின் வாராந்திர ஊதியங்கள் (₹ இல்) ₹1200, ₹1300, ₹1100, ₹1400, ₹1250, ₹1350, ₹1150 ஆகும். ஊதியத்தின் இடைநிலை அளவு என்ன?**

Ans

✗ A. ₹1350

✓ B. ₹1250

✗ C. ₹1300

✗ D. ₹1200

Q.29 **ஒரு காரின் ரேடியேட்டரில் 84% ஆன்டிஃபிரீஸ் கரைசல் இருக்க வேண்டும். ஒரு வாகன ஓட்டியிடம் 10 லிட்டர் அளவில் 70% ஆன்டிஃபிரீஸ் உள்ளது. எனில், 84% ஆன்டிஃபிரீஸைத் தயாரிக்க, அவர் தனது கரைசலுடன், 95% ஆன்டிஃபிரீஸ் திரவத்தை எத்தனை லிட்டர் சேர்க்க வேண்டும்? (2 தசம இடங்களுக்கு முழுமையாக்கவும்)**

Ans

✗ A. 15.38

✗ B. 18.61

✗ C. 10.34

✓ D. 12.73

Q.30 இந்த கேள்வியில், ஒரு கேள்வியைத் தொடர்ந்து (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் கேள்விக்கு பதிலளிக்க, போதுமானவையா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு கூற்றுகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

Q. கிராத், ரேயான்ஷ், சமிகா, துஷார் மற்றும் உர்விகா ஆகிய ஐந்து நபர்கள், 1 முதல் 5 வரை எண்கள் இடப்பட்ட (1 என்பது மிகவும் கீழ்த்தளம் மற்றும் 5 என்பது உச்சித்தளம்) ஐந்து மாடிக் கட்டிடத்தின் வெவ்வேறு தளங்களில் வசிக்கின்றனர். எனில், 5வது தளத்தில் வசிப்பவர் யார் ?

(I) சமிகா என்பவர் துஷாருக்கு மேலே வசிக்கிறார், துஷார் என்பவர் ரேயான்ஷுக்கு மேலே வசிக்கிறார்.
(II) உர்விகா என்பவர் சமிகாவுக்கு மேலே வசிக்கிறார் மற்றும் கிராத் என்பவர் ரேயான்ஷுக்கு கீழே வசிக்கிறார்.

Ans
✔ A. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை

✘ B. கூற்று I-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

✘ C. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்ந்தும் கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல

✘ D. கூற்று II-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

Q.31 கனசெவ்வக வடிவில் உள்ள ஒரு மரப்பெட்டியின் உட்புற அளவுகள் 19.8 cm × 13.2 cm × 8.8 cm ஆகும். இப்பெட்டியில் , ஒவ்வொன்றும் 2.2 cm பக்க அளவு கொண்ட சிறிய கனசதுர பிளாக்குகளால் முழுமையாக நிரப்பப்படுகிறது. அப்பெட்டியை முழுமையாக நிரப்பத் தேவைப்படும் கனசதுரங்களின் எண்ணிக்கையைக் கண்டறியவும்.

Ans
✘ A. 232

✘ B. 200

✘ C. 256

✔ D. 216

Q.32 A, H, M, P, S மற்றும் V ஆகியோர் ஒரு வட்ட மேசையைச் சுற்றி அதன் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். H என்பவர் M இன் உடனடி வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார். P இன் வலதுபுறத்தில் இருந்து எண்ணும் போது P மற்றும் A க்கு இடையில் இரண்டு நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். S என்பவர் P இன் உடனடி அருகாமையாளர் அல்ல. V என்பவர் S இன் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். H இன் இடதுபுறத்தில் இருந்து எண்ணும் போது H மற்றும் V க்கு இடையில் எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

Ans
✘ A. 2

✘ B. 1

✘ C. 4

✔ D. 3

Q.33 E, F, G, H, W, X மற்றும் Y ஆகிய ஏழு நபர்கள் ஒரு வட்ட மேசையைச் சுற்றி, அதன் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். E என்பவர் X இன் இடதுபுறத்தில் நான்காவது இடத்தில் அமர்ந்துள்ளார். H இன் இடமிருந்து எண்ணும்போது, H மற்றும் G க்கு இடையில் இரண்டு நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். F என்பவர் Y இன் இடதுபுறத்தில் மூன்றாவது இடத்தில் அமர்ந்துள்ளார். W என்பவர் Y மற்றும் G ஆகியோரின் ஒரு உடனடி அருகாமையாளர் ஆவார். எனில், W இன் வலதுபுறத்தில் நான்காவது இடத்தில் அமர்ந்துள்ளவர் யார்?

Ans
✘ A. F

✘ B. E

✘ C. G

✔ D. H

Q.34 ஒரு திசைவேகம்-கால வரைபடத்திலிருந்து, _____ஐக் கணக்கிடுவதன் மூலம், இரு குறிப்பிட்ட தருணங்களுக்கு இடைப்பட்ட ஒரு பொருளின் இடப்பெயர்ச்சியை தீர்மானிக்க முடியும்.

Ans

✗ A. திசைவேக அச்சின் வெட்டுத்துண்டு.

✗ B. வரைபடத்தின் நீளம்.

✓ C. வரைபடத்திற்கும் கால அச்சிற்கும் இடைப்பட்ட பரப்பு.

✗ D.
வரைபடத்தின் சாய்வு.

Q.35 ஒரு கடைக்காரர், ஒரு பேனாவை ₹100 க்கு வாங்கி, அதை ₹150 க்கு விற்கிறார். எனில், லாப சதவீதம் என்ன?

Ans

✗ A. 48%

✗ B. 40%

✓ C. 50%

✗ D. 45%

Q.36 ஒரு கேள்வியைத் தொடர்ந்து (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் கேள்விக்கு பதிலளிக்க, போதுமானவையா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு கூற்றுகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

கேள்வி:
வெவ்வேறு உயரங்களைக் கொண்ட T, N, R, K மற்றும் I ஆகிய 5 குச்சிகளில், எந்தக் குச்சி மிகக் குறைவான உயரத்தைக் கொண்டது?

கூற்றுகள்:
(I) K-ஆனது I-ஐ விடக் குறைவான உயரத்தையும், ஆனால், N-ஐ விட அதிக உயரத்தையும் கொண்டுள்ளது. T-ஆனது N-ஐ விட உயரமானது.
(II) R-ஆனது ஒரே ஒரு குச்சியை விட மட்டுமே உயரமானது.

Ans

✗ A. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்தும் கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல

✗ B. கூற்று I-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

✗ C. கூற்று II-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

✓ D. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை

Q.37 பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஒன்றுக்கொன்று பறிமாற்றப்பட்டு மற்றும் '×' மற்றும் '÷' ஒன்றுக்கொன்று பறிமாற்றப்படுகிறது எனில், கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?
10 ÷ 2 + 70 × 5 − 80 = ?

Ans

✗ A. 76

✗ B. 66

✓ C. 86

✗ D. 83

Q.38 கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ஜோடிகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு ஜோடிகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.

XZC–EGJ
MOR–TVY

Ans

✓ A. LNQ–SUX

✗ B. LMO–RTW

✗ C. LNQ–RUW

✗ D. LMO–SUX

Q.39 A, B மற்றும் C ஆகிய மூன்று நண்பர்கள் ஒரு வணிகத்தில் 2:3:5 என்ற விகிதத்தில் முதலீடு செய்கிறார்கள். மொத்த இலாபம் ₹1,00,000 எனில், A-ஐ விட, C எவ்வளவு அதிகமாகப் பெறுகிறார்?

Ans
- ✔ A. ₹30,000
- ✘ B. ₹10,000
- ✘ C. ₹40,000
- ✘ D. ₹20,000

Q.40 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில்,'WHAT'என்பது '2789' என்றும் 'HATS' என்பது '1789' என்றும் குறியிடப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் 'S' க்கான குறியீடு என்ன?

Ans
- ✔ A. 1
- ✘ B. 8
- ✘ C. 2
- ✘ D. 7

Q.41 ஒரு குறிப்பிட்ட தொகையானது, 2 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு 12% வட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டது. 2 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தொகைக்குக் கிடைத்த முழுஆண்டு கூட்டுவட்டி விகிதத்தில் கூட்டு வட்டிக்கும் , மற்றும் தனி வட்டிக்கும் இடையிலான வித்தியாசம் ₹101.76 ஆகும். எனில், அசல் தொகை எவ்வளவு? (பதிலை இரண்டு தசம இடங்களுக்கு முழுமையாக்கவும்).

Ans
- ✘ A. ₹7,680.82
- ✘ B. ₹6,050.23
- ✘ C. ₹6,842.48
- ✔ D. ₹7,066.67

Q.42 கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?
YVX 9, URT 14, QNP 19, MJL 24, ?

Ans
- ✘ A. IHF 28
- ✘ B. GFH 29
- ✘ C. IFG 28
- ✔ D. IFH 29

Q.43 '+' என்றால் '−' எனவும், '−' என்றால் '×' எனவும், '×' என்றால் '÷' எனவும், '÷' என்றால் '+' எனவும் கொண்டால், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறியின் (?) இடத்தில் என்ன வரும்?

30 − 4 ÷ 4 + 40 × 10 = ?

Ans
- ✘ A. 118
- ✔ B. 120
- ✘ C. 124
- ✘ D. 122

Q.44 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் MING என்பது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் TPUN உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், OKPI என்பது VRWP உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, JFKD என்பது கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எதனுடன் தொடர்புடையது?

Ans
- ✔ A. QMRK
- ✘ B. QMJU
- ✘ C. QRHY
- ✘ D. QMKI

black book

Q.45 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'piano juice bonus' என்பது 'ui gc fh' என்றும், 'bonus lemon judge' என்பது 'hp ui gt' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியின்படி 'bonus' என்பது எப்படி குறியிடப்படுகிறது?

Ans
- ✔ A. ui
- ✘ B. gc
- ✘ C. fh
- ✘ D. hp

Q.46 முறையே 148 m மற்றும் 156 m நீளம் கொண்ட இரண்டு ரயில்கள் ஒன்றை ஒன்று நோக்கிச் செல்கின்றன. அவற்றின் வேகங்கள் முறையே 17.5 m/s மற்றும் 20.5 m/s ஆகும். ரயில்கள் ஒன்றையொன்று கடக்க தேவைப்படும் நேரம் என்னவாக இருக்கும்?

Ans
- ✔ A. 8 வினாடிகள்
- ✘ B. 7 வினாடிகள்
- ✘ C. 9 வினாடிகள்
- ✘ D. 10 வினாடிகள்

Q.47 A, B, F, G, H மற்றும் I ஆகிய ஆறு பெட்டிகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்படுகின்றன, ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. A பெட்டி மட்டுமே I பெட்டிக்கு மேலே வைக்கப்பட்டுள்ளது. A மற்றும் F பெட்டிகளுக்கு இடையே இரண்டு பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. G பெட்டி மட்டுமே H பெட்டிக்கு கீழே வைக்கப்பட்டுள்ளது. B மற்றும் G பெட்டிகளுக்கு இடையில் எத்தனை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன?

Ans
- ✔ A. இரண்டு
- ✘ B. மூன்று
- ✘ C. ஒன்று
- ✘ D. நான்கு

Q.48 கொடுக்கப்பட்ட இத்தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?
514 393 293 212 148 ?

Ans
- ✔ A. 99
- ✘ B. 116
- ✘ C. 106
- ✘ D. 92

Q.49 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. எந்த எழுத்து-தொகுப்பு ஜோடி குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

Ans
- ✘ A. US–QO
- ✘ B. VT–RP
- ✘ C. NL–JH
- ✔ D. WU–RS

Q.50 சாஹில் புள்ளி A இல் தொடங்கி, மேற்கு நோக்கி 14 km ஓட்டுகிறார். பின்னர் அவர் வலதுபுறம் திரும்பி, 10 km ஓட்டி, வலதுபுறம் திரும்பி, 17 km ஓட்டுகிறார். பின்னர் அவர் வலதுபுறம் திரும்பி, 15 km ஓட்டுகிறார். அவர் இறுதியாக வலதுபுறம் திரும்பி, 3 km ஓட்டி, புள்ளி P இல் நிறுத்துகிறார். மீண்டும் புள்ளி A ஐ அடைய அவர் எவ்வளவு தூரம் (மிகக்குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையை நோக்கி ஓட்டிச் செல்ல வேண்டும்? (குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90-டிகிரி திருப்பங்கள் மட்டுமே.)

Ans

✔ A. 5 km வடக்கு நோக்கி

✘ B. 6 km தெற்கு நோக்கி

✘ C. 7 km தெற்கு நோக்கி

✘ D. 6 km வடக்கு நோக்கி

Q.51 ஒரு நபர் ₹56,500 என்னும் தொகையை, ஆண்டுக்கு 8% என்னும் தனிவட்டி விகிதத்தில் 2 ஆண்டுகளுக்கு முதலீடு செய்தார். 2 ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்குக் கிடைக்கும் தொகையைக் (₹-இல்) கண்டறியவும்.

Ans

✘ A. 64,450

✘ B. 64,540

✘ C. 65,450

✔ D. 65,540

Q.52 A என்பவர் கொடுக்கப்பட்ட இரண்டு ரயில் நிலையங்களுக்கு இடையே ஒரு ரயில் பாதையை 7 நாட்களில் அமைக்க முடியும் மற்றும் B என்பவர் அதே வேலையை 63 நாட்களில் செய்ய முடியும். அவர்கள் C இன் உதவியுடன் அந்த வேலையை 6 நாட்களில் மட்டுமே செய்வார்கள் எனில், C மட்டுமே அந்த வேலையை _____ இல் செய்ய முடியும்.

Ans

✘ A. 127 நாட்கள்

✘ B. 129 நாட்கள்

✘ C. 128 நாட்கள்

✔ D. 126 நாட்கள்

Q.53 ஒரு ஜோடி காலணிகளின் விலை ₹2000 எனக் குறிக்கப்பட்டுள்ளது. பண்டிகைக்கால விற்பனையின்போது, ஒரு கடைக்காரர் அதன்மீது 30% தள்ளுபடி வழங்குகிறார். வழங்கப்பட்ட தள்ளுபடித் தொகை எவ்வளவு?

Ans

✘ A. ₹700

✔ B. ₹600

✘ C. ₹800

✘ D. ₹500

Q.54 பூமியில் நடைபெறும் ஒளிச்சேர்க்கைக்கு, மின்காந்த நிறமாலையின் பின்வரும் எந்தப் பிரிவு(கள்) முதன்மையாகக் காரணமாக அமைகின்றன?

Ans

✘ A. புறஊதா கதிர்வீச்சு

✔ B.
புலப்படும் ஒளி

✘ C.
ரேடியோ அலைகள்

✘ D.
நுண்ணலைகள்

Q.55 இந்த கேள்வி பின்வரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது.
DIN GOD LAY DUB
ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள, ஒவ்வொரு உயிரெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி அதற்கு முன்பாக வரும் இரண்டாவது எழுத்தாக மாற்றப்பட்டு, ஒவ்வொரு மெய்யெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி அதைத் தொடர்ந்து உடனடி பின்பாக வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட எத்தனை எழுத்துத்-தொகுப்புகளில், எந்த உயிரெழுத்தும் தோன்றாது?

Ans
- ✗ A. மூன்று
- ✗ B. நான்கு
- ✓ C. ஒன்று
- ✗ D. இரண்டு

Q.56 கொடுக்கப்பட்ட இத்தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?
4 12 23 31 42 50 ?

Ans
- ✗ A. 63
- ✗ B. 58
- ✓ C. 61
- ✗ D. 54

Q.57 **49A952B** என்கிற 7 இலக்க எண் ஆனது 12-ஆல் வகுபடும் எனில், (A + B) இன் குறைந்தபட்ச மதிப்பு என்ன?

Ans
- ✗ A. 3
- ✗ B. 4
- ✓ C. 1
- ✗ D. 2

Q.58 பிநாயக் புள்ளி A இல் தொடங்கி, கிழக்கு நோக்கி 11 km ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 8 km ஓட்டி, இடதுபுறம் திரும்பி, 12 km ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 10 km ஓட்டுகிறார். அவர் இறுதியாக இடதுபுறம் திரும்பி, 1 km ஓட்டி, புள்ளி P இல் நிறுத்துகிறார். மீண்டும் புள்ளி A ஐ அடைய அவர் எவ்வளவு தூரம் (மிகக்குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையை நோக்கி ஓட்டிச் செல்ல வேண்டும்?
(குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90 டிகிரி திருப்பங்கள் மட்டுமே.)

Ans
- ✗ A. 1 km வடக்கு நோக்கி
- ✗ B. 4 km வடக்கு நோக்கி
- ✗ C. 3 km வடக்கு நோக்கி
- ✓ D. 2 km வடக்கு நோக்கி

Q.59 **DARKISH** என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு உயிரெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி அடுத்து வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது; மற்றும், ஒவ்வொரு மெய்யெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி முந்தைய எழுத்தாக மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட எழுத்துகளின் குழுவில், எத்தனை எழுத்துகள் சரியாக இரண்டு முறை தோன்றும்?

Ans
- ✗ A. 3
- ✗ B. 2
- ✓ C. 1
- ✗ D. 0

Q.60 பின்வரும் தாவரத் திசுக்களில் எது, துளைகளுடைய சுவர்களால் ஒன்றோடொன்று முனையோடு முனை அடுக்கப்பட்ட நீண்ட மற்றும் உயிருள்ள செல்களால் ஆனதாகும்?

Ans
- ✗ A. புளோயம் நார்கள்
- ✗ B. குழாய்கள் (Vessels)
- ✓ C. சல்லடைக் குழாய்கள்
- ✗ D. டிரக்கீடுகள் (Tracheids)

black

Q.61 வட்டியானது அரையாண்டுக்கு ஒரு முறை கூட்டப்படும் கூட்டுவட்டி விகிதத்தில் செலுத்தப்படுமாறு, ₹8,680 எனும் தொகை மீது, ஒரு ஆண்டுக்கு, ஆண்டுக்கு 10% என்ற வட்டி விகிதத்தில், ஈட்டப்படும் கூட்டுவட்டியைக் கண்டறியவும் (அருகிலுள்ள ரூபாய்க்கு முழுமையாக்கவும்).

Ans

✗ A. ₹850

✓ B. ₹890

✗ C. ₹880

✗ D. ₹840

Q.62 அமன் தன் மகனின் வயதைப்போல் மூன்று மடங்கு மூத்தவர்; மேலும் அவரது மகள், மகனை விட 3 ஆண்டுகள் இளையவர் ஆவார். 3 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மூன்று நபர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 108 ஆண்டுகள் எனில், அமனின் தற்போதைய வயது (ஆண்டுகளில்) _____ ஆகும்.

Ans

✗ A. 59

✗ B. 70

✗ C. 48

✓ D. 72

Q.63 P, Q மற்றும் R ஆகியோர் 2 : 3 : 5 என்ற விகிதத்தில் முதலீடுகளுடன் ஒரு தொழிலைத் தொடங்குகின்றனர். வருடாந்திர லாபத்தில் P இன் பங்கு ₹4,000 எனில், மொத்த லாபம் எவ்வளவு?

Ans

✗ A. ₹15,000

✗ B. ₹18,000

✓ C. ₹20,000

✗ D. ₹25,000

Q.64 சுருக்குக: $3-\sqrt{5}+\frac{1}{\sqrt{5}-\sqrt{3}}+\frac{1}{\sqrt{5}-\sqrt{3}}$

Ans

✗ A. $2+\sqrt{5}$

✗ B. $\sqrt{3}-\sqrt{5}$

✓ C. $3+\sqrt{3}$

✗ D. 3

Q.65 ஒரு வணிகர் ஒரு kg க்கு ₹40 விலையுள்ள 30 kg அரிசியை, ஒரு kg க்கு ₹60 விலையுள்ள 20 kg அரிசியுடன் கலக்கிறார். எனில், இந்தக் கலவையின் ஒரு kg க்கான சராசரி விலை என்ன?

Ans

✗ A. ₹50

✓ B. ₹48

✗ C. ₹52

✗ D. ₹45

Q.66 பின்வரும் எழுத்து வரிசையைப் பார்த்து, கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக எண்ணப்பட வேண்டும்.
(இடது) I X U Q T O D I R R Z I P T T D E O L I U Z (வலது)
தனக்கு உடனடி முன்பாக ஒரு மெய்யெழுத்தையும் மற்றும் உடனடி பின்பாக ஒரு உயிரெழுத்தையும் கொண்டுள்ளவாறு இருக்கும் மெய்யெழுத்துக்கள் எத்தனை உள்ளன?

Ans

✗ A. 2

✗ B. 5

✓ C. 3

✗ D. 4

Black book

Q.67 பின்வரும் எழுத்து மற்றும் சின்னத்தின் வரிசையைப் பார்த்து, பின்வரும் கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும்.

(இடது) O H # M N @ $ R & I Ω T £ D H R Y (வலது)

தனக்கு உடனடி முன்பாக ஒரு சின்னத்தையும், மற்றும் உடனடி பின்பாகவும் ஒரு சின்னத்தையும் கொண்டுள்ளவாறு எத்தனை உயிரெழுத்துக்கள் உள்ளன?

Ans

✔ A. ஒன்று

✘ B. இரண்டு

✘ C. மூன்று

✘ D. எதுவுமில்லை

Q.68 இந்த கேள்வி கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து, மூன்று இலக்க எண்களை அடிப்படையாகக் கொண்டது.
(இடது) 956 587 124 963 248 (வலது)
(எடுத்துக்காட்டு-697 – முதல் இலக்கம் = 6, இரண்டாவது இலக்கம் = 9 மற்றும் மூன்றாவது இலக்கம் = 7)
குறிப்பு-அனைத்து செயல்பாடுகளும் இடமிருந்து வலமாக செய்யப்பட வேண்டும்.
மிகப் பெரிய எண்ணின் இரண்டாவது இலக்கத்தையும், மிகச் சிறிய எண்ணின் மூன்றாவது இலக்கத்தையும் கூட்டினால் கிடைப்பது என்ன?

Ans

✘ A. 12

✔ B. 10

✘ C. 7

✘ D. 9

Q.69 A, B, C, D மற்றும் E ஆகிய ஒவ்வொருவரும் வெவ்வேறு மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். D என்பவர் மூன்றாவது மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றார். B என்பவர் C ஐ விட குறைவான மதிப்பெண் பெற்றார். E என்பவர் A ஐ விட அதிகமாக, ஆனால் B ஐ விட குறைவாக மதிப்பெண் பெற்றார். எனில் எத்தனை நபர்கள் E என்பவரை விட அதிகமாக மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்?

Ans

✘ A. ஒன்று

✔ B. மூன்று

✘ C. நான்கு

✘ D. இரண்டு

Q.70 cosec 43° = x எனில்,
$\left[\frac{1}{\text{cosec}^2 47^\circ} + \sin^2 43^\circ + \tan^2 47^\circ - \frac{1}{\sin^2 47^\circ \sec^2 43^\circ}\right]$ இன் மதிப்பு என்ன?

Ans

✘ A. $2x^2 - 3$

✔ B. $x^2 - 1$

✘ C. $x^2 + 1$

✘ D. $2x + 3$

Q.71 CHAPTER என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு எழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி சீரமைக்கப்பட்டால் எத்தனை எழுத்துக்களின் நிலை(கள்) மாறாமல் இருக்கும்?

Ans

✘ A. மூன்று

✔ B. எதுவுமில்லை

✘ C. இரண்டு

✘ D. ஒன்று

black

Q.72 பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது மற்றும் '×' மற்றும் '÷' ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது எனில், கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?

43 – 16 ÷ 9 + 154 × 14 = ?

Ans

✗ A. 170

✗ B. 174

✓ C. 176

✗ D. 177

Q.73 கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ஜோடிகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு ஜோடிகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.

QRU–TUX
STW–VWZ

Ans

✗ A. GHK–IKM

✓ B. GHK–JKN

✗ C. GGI–JKN

✗ D. GGI–IJM

Q.74 GUILDER என்ற வார்த்தையிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் ஆங்கில அகரவரிசைப்படி மாற்றியமைக்கப்படுகிறது எனில், அவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய எழுத்து-தொகுப்பில், இடமிருந்து நான்காவதாக உள்ள எழுத்திற்கும் வலமிருந்து முதலாவதாக உள்ள எழுத்திற்கும் இடையில் ஆங்கில அகரவரிசையின்படி எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

Ans

✗ A. 10

✗ B. 12

✗ C. 14

✓ D. 11

Q.75 காற்றில்லா சுவாசத்தின் போது, குளுக்கோஸ் சிதைவுறுதலானது செல்லின் எந்தப் பகுதியில் நடைபெறுகிறது?

Ans

✗ A. செலின் ஆற்றல் மையம் என்று அழைக்கப்படும் மைட்டோகாண்ட்ரியாவில்

✓ B. செல்லுலார் வினைகள் நடைபெறும் சைட்டோபிளாசத்தினுள்

✗ C. ஒளிச்சேர்க்கையின் மூலம் உணவு தயாரிப்பதற்கு காரணமான பசுங்கணிகங்களில்

✗ D. செல்லின் அனைத்துச் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தும் உட்கருவின் உள்ளே

"

Blackbook